www.tnpsctoday.com

# TNPSC நடப்பு நிகழ்வுகள் TNPSC TODAY டுடே

காலை எழுந்தவுடன் படிப்பு!

**புதன்கிழமை | 01.01.2025**

# நடப்பு நிகழ்வுகள்
# DAILY NEWS PAPER CLIPS

## தினம் ஒரு திருக்குறள் 591

**உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்**
**உடையது உடையரோ மற்று.**

ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ?

Join our telegram channel
https://t.me/tnpsctodaynews

TNPSC
குரூப்-1, குரூப்-2, குரூப்-4
போன்ற போட்டித் தேர்வுகளுக்கு
பயன்படும் வகையில்
**பிரபல நாளிதழ்களில் வெளியாகும்**
மிக முக்கியமான நடப்பு நிகழ்வுகளின்
செய்தித் துணுக்குகள்...

## நடப்பு நிகழ்வுகள் Current Affairs | 2025 TNPSC பாடத்திட்டம் | New Syllabus

### பொது அறிவியல் (General Science)

1. இந்தியாவின் வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் தாக்கம் (Role and Impact of Science and Technology in the Development of India)

### புவியியல் (Geography)

2. பொது புவியியல் (General Geography)
3. இந்தியாவின் புவியியல் (Geography of India)
4. தமிழ்நாட்டின் புவியியல் (Geography of Tamil Nadu)

### வரலாறு (History)

5. இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் தேசிய இயக்கம் (History, Culture of India, and Indian National Movement)
6. செய்திகளில் இடம் பெற்ற சிறந்த ஆளுமைகளும் / இடங்களும் (Eminent personalities and places in news)
7. விளையாட்டு (Sports)
8. நூல்களும் ஆசிரியர்களும் (Books and authors)

### இந்திய ஆட்சியியல் (Indian Polity)

9. இந்திய அரசியலமைப்பு மற்றும் இந்தியாவின் மீது உலகலாவிய அரசியல் மாற்றங்களின் தாக்கம் (Indian Polity and Emerging Political Trends across the World affecting India)

### இந்திய பொருளாதாரம் (Indian Economics)

10. தற்போதைய பொருளாதார போக்குகள் மற்றும் இந்தியாவில் உலக பொருளாதாரத்தின் தாக்கம் (Current Economic Trends and Impact of Global Economy on India)
11. தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் (Development Administration in Tamil Nadu)
12. இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் சமூகப் பிரச்சனைகள் (Social Issues in India and Tamil Nadu)

### சுற்றுச்சூழல் (Environment)

13. சுற்றுச்சூழல், உயிரினப் பன்மை மற்றும் பேரிடர் மேலாண்மை (Environment, Biodiversity and Disaster Management)

# ஆண்டுதோறும் டிசம்பரில் 'திருக்குறள் வாரம்'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா மலரை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட பெற்றுக் கொள்கிறார் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார். உடன் (இடமிருந்து) அரசுத் துறை முதன்மைச் செயலர் தா. கார்த்திகேயன், அமைச்சர்கள் ஆர். ராஜேந்திரன், தங்கம் தென்னரசு, கவிஞர் வைரமுத்து, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், இ. பெரியசாமி, எ.வ.வேலு, மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், குமரி மாவட்ட ஆட்சியர் ரா.அழகுமீனா.

**நாகர்கோவில், டிச. 31:** 'ஆண்டுதோறும் டிசம்பர் கடைசி வாரம் குறள் வாரமாக கொண்டாடப்படும்' என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

ஆண்டுதோறும் 133 உயர் கல்வி நிறுவனங்களில், திருக்குறள் தொடர்பான கலை இலக்கிய அறிவுசார் போட்டிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டு திருக்குறள் ஓலைச் சுவடிகள், புத்தகங்கள், மின்நூல்கள், திருவள்ளுவர் சிலை பற்றிய புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்தார்.

தொடர்ந்து, திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா சிறப்பு மலரை வெளியிட்டு, திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா வளைவுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர், திருக்குறள் சார்ந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கி முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

முக்கடல் சூழும் குமரிமுனையில், முப்பால் புலவர் வள்ளுவருக்கு கருணாநிதி வைத்த சிலையைப் போற்றக்கூடிய வெள்ளி விழாவை திராவிட ஆட்சியில் நடத்தி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். வாழ்நாளில் என் சிறந்த நாளாக தமிழின் பெருமையை, குறளின் அருமையை இளைய தலைமுறைக்கு கொண்டுசெல்லும் கடமையை நிறைவேற்றியதாக மகிழ்ச்சி அடைகிறேன்.

25 ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சிலையைத் திறந்து வைத்தபோது, தன்னுடைய உடல் நடுங்கியதாக கருணாநிதி கூறினார். ஏனென்றால், அந்த அளவுக்கு உணர்ச்சிப் பெருக்கத்தில் அவர் இருந்தார். வான்புகழ் வள்ளுவருக்கு வானுயரச் சிலை அமைக்க வேண்டும் என்பது அவருடைய நெடுங்கனவு. அந்தக் கனவு நனவான மகிழ்ச்சி அவருக்கு அந்த உணர்வைத் தந்தது.

இப்போது, திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவை நடத்துவது எனக்குப் பெருமையாக இருக்கிறது. எவ்வளவு பெரிய சாதனையைச் செய்துவிட்டு, நமக்கு இப்படி ஒரு வரலாற்று வாய்ப்பை கருணாநிதி உருவாக்கித் தந்துவிட்டுப் போயிருக்கிறார் என்ற எண்ணம்தான் அந்தப் பெருமைக்கு காரணம்.

திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று சொன்னவுடன், அதற்கு பெரிய விழா நடத்த வேண்டும் என்று சொன்னேன். உடனே சிலர், ஒரு சிலை அமைத்ததற்கு எதற்கு விழா நடத்த வேண்டும் என்று கேட்கத் தொடங்கினார்கள். அவர்கள் கேள்வியில் அர்த்தம் கிடையாது; ஆனால், உள்ளர்த்தம் இருக்கிறது. அவர்களுக்கு பதில் சொல்லத் தேவையில்லை.

**திருக்குறள் வாரம்:** ஒவ்வொரு மாவட்டத்திலும் திருக்குறளில் ஆர்வமும், புலமையும்மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டம்தோறும் தொடர் பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

'திருக்குறள் திருப்பணிகள்' தொடர்ந்து நடைபெற திட்டம் வகுக்கப்படும். இதற்காக, ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தலா ரூ.3 லட்சம் வழங்கப்படும்.

ஆண்டுதோறும் 133 உயர் கல்வி நிறுவனங்களில், திருக்குறள் தொடர்பான கலை இலக்கிய அறிவுசார் போட்டிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம் 'குறள் வாரம்' கொண்டாடப்படும்.

தமிழ்த் திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும்.

தென்கோடியில் வள்ளுவர் சிலையால் சிறப்பு பெற்றிருப்பதோடு, சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் கன்னியாகுமரி பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.

முக்கடல் சூழும் குமரிமுனையில் இருந்து சுற்றுலாப் பயணிகள் திருவள்ளுவர் சிலையைச் சென்றடைய படகு சவாரி வசதியை மேம்படுத்துவதற்காக 3 புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும். அந்தப் படகுகளுக்கு காமராஜர், மார்ஷல் நேசமணி, ஜி.யு. போப் பெயர்கள் சூட்டப்படும் என்றார் முதல்வர் ஸ்டாலின்.

### 'தமிழர்களுக்கான உலக அடையாளம்'

'திருவள்ளுவர், தமிழர்களுக்கான உலக அடையாளம். திருக்குறள் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். அதனால் கொண்டாடுகிறோம்.

தமிழ்நெறியின் அடையாளமாக, சுனாமியையும் எதிர்த்து உயர்ந்து நிற்கிற இந்த வள்ளுவர் சிலைதான், நம்முடைய அடையாளத்தின் பண்பாட்டுக் குறியீடு. இந்தக் கம்பீர வள்ளுவர் சிலைக்கு கருணாநிதி காரணகர்த்தா என்றால், சிற்பக் கலைஞர் கணபதி ஸ்தபதிதான் கலைகர்த்தா.

இந்தச் சிலை திருக்குறளின் அதிகாரங்களை குறிக்கிற வகையில் 133 அடி உயரம் கொண்டது. அதில், அறத்துப்பால் அதிகாரங்களைக் குறிக்கிற வகையில் 38 அடி பீடம். அறம் என்ற பீடத்தில் பொருளும் இன்பமுமாக 95 அதிகாரங்கள் சிலையாக இருக்கிறது. 7,000 டன் எடை கொண்ட இந்தச் சிலையில் 3,681 கற்கள் இருக்கின்றன.

திருவள்ளுவர் வெறும் சிலையல்ல; திருக்குறள் வெறும் நூல் அல்ல; நம்முடைய வாழ்க்கைக்கான வாளும் கேடயமும். அது நம்மைக் காக்கும், நம்மை அழிக்க வரும் தீமைகளைத் தடுக்கும். காவி சாயம் பூச நினைக்கிற தீய எண்ணங்களை விரட்டியடிக்கும்.

பள்ளி, கல்லூரிகள், அரசு அலுவலகங்களில் திருக்குறளை இன்னும் அதிகமாக இடம்பெறச் செய்ய வேண்டும். தனியார் நிறுவனங்களும் இதைப் பின்பற்ற வேண்டும்' என்றார் முதல்வர் ஸ்டாலின்.



**ஆர்.பாலகிருஷ்ணன்**
ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி, 'ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை' உள்ளிட்ட நூல்களின் ஆசிரியர்.
தொடர்புக்கு:balakrishnan.irc@rmrl.in



# பேரறிவுச் சிலை

இந்தியத் துணைக்கண்டத்தின் பெருநிலவெளியும் முந்நீர்ப் பெருங்கடற்பரப்பும் கைகுலுக்கிக் கொள்ளும் குமரிமுனையில் ஆர்ப்பரிக்கும் அலைகளுக்கு நடுவே குன்றென நிமிர்ந்து நிற்கும் குறியீடாக அய்யன் திருவள்ளுவரின் பேரறிவுப் பெருஞ்சிலை. இந்தச் சிலை இல்லாத குமரிக் கடலைக் கற்பனைசெய்துகூடப் பார்க்க முடியாது. அந்த அளவுக்கு உலகத் தமிழரின் உள்ளுணர்வில் அழகாக, ஆழமாக வேரூன்றிவிட்டது இந்தப் பெருஞ்சிலை.

**வரலாற்றுச் சிறப்பு**

2,000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் எழுதப்பட்ட உலக இலக்கியம்; பொது யுகத்தின் 2,000 ஆண்டுகள் முடிந்து அடுத்த 1,000 ஆண்டுகளில் உலகம் அடியெடுத்துவைக்கும் மிக முக்கியமான 'மைல்கல்' நாள் (01.01.2000); மூன்று கடல்கள் சந்திக்கும் முன்வாசல் போன்ற நீர்முற்றத்தில் திருவள்ளுவர் சிலை. இடமும் நாளும் எப்படிப் பொருந்திவந்துள்ளன அந்த வரலாற்றுத் தருணத்திற்காக. இப்போது 25 ஆண்டுகளாகிவிட்டன. வெள்ளிவிழாக் கோலம்!

திருவள்ளுவருக்குக் குமரிமுனையில் சிலை எழுப்பும் திட்டத்தை, 1975 டிசம்பர் மாதம் அன்றைய முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அறிவித்தார். இறுதியில் 2000ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள்தான் சிலையைத் திறக்க முடிந்தது. இடையில் 25 ஆண்டுகள், பல அரசியல் நிகழ்வுகள், மாற்றங்கள், அதனால் நேர்ந்த தாமதங்கள். பின்னோக்கிப் பார்க்கையில் இந்தத் தாமதம்கூடப் பொருத்தமானது என்றே தோன்றுகிறது. சென்னையில் வள்ளுவர் கோட்டத்தை எழுப்பிய, குறளோவியம் படைத்த கருணாநிதி, தான் திட்டமிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பணியை அவரே முடித்துத் திறந்துவைத்தார் என்பது சிறப்பு அல்லவா! அதுவும் அப்படிப்பட்ட ஒரு முக்கியமான நாளில்.

**குறளின் பெருமைகள்**

திருக்குறள் – தமிழில் எழுதப்பட்ட உலக இலக்கியம். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற பாரதியின் வரிகள் பொருத்தமான புகழ்மகுடம். திருக்குறள் ஒரு வெளிப்படையான இலக்கியம், அதில் ஒளிவுமறைவு ஏதுமில்லை. விரிந்து பரந்த உலகப் பார்வையும் குறிப்பிட்ட சமயச் சார்பின்மையும் திருக்குறளின் தலையாய பண்புகள். அதனால்தான் அடையாளங்களை எல்லாம் கடந்து நிற்கும் அற்புதமாகத் திருக்குறள் உலகத்தால் கொண்டாடப்படுகிறது.

திருக்குறள் ஒரு மந்திரமோ தந்திரமோ அல்ல; உண்மையில் சொல்லப்போனால் அது ஒரு சுதந்திரம். 'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்' என்று மனித முயற்சியின் மகத்துவம் பேசிய மகாசாசனம்.

குமரிமுனையில் இந்தப் பேரறிவுச் சிலை திறப்புவிழாவில் இந்தச் சிலையை உருவாக்கிய கணபதி ஸ்தபதி குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டி, "கடலும் மலையும் உள்ளவரை இந்தச் சிலை இருக்கும்" என்று கருணாநிதி பெருமிதத்துடன் பேசினார். அதற்குப் பின் 2004ஆம் ஆண்டு நேர்ந்த ஆழிப்பேரலையின் சீற்றத்தையும் எதிர்கொண்டு திருவள்ளுவர் சிலை இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கோடி இயற்கைச் சூழலில் இயல்பாகப் பொருந்தி அதன் ஓர் அங்கம்போல் ஆகிவிட்டது.

**மக்களின் குரல்**

இந்தச் சிலையின் கட்டமைப்புக்குப் பின்னால் திருக்குறளின் அமைப்பு சார்ந்த ஒரு திட்டமிடல் உள்ளது என்பதை உணரும்போது வியப்பாக இருக்கிறது. சிலையின் அறபீடம் 38 அடி– ஏனெனில், திருக்குறளின் அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள்; திருவள்ளுவரின் முழு உருவச்சிலை 95 அடி, ஏனெனில் பொருட்பால் (70), இன்பத்துப்பால் (25) இரண்டும் சேர்த்து 95 அதிகாரங்கள். அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலின் குறியீடாக 30 அடி உயரம் கொண்ட இயற்கையான பாறை. அதன் மீது அறம் என்ற பீடத்தில் நிற்கும் திருவள்ளுவர். திருக்குறளின் அடிப்படை திசை அறம்தான். 'அறத்தான் வருவதே இன்பம்' என்பதே திருக்குறள் முன்வைக்கும் தெளிவு.

திருக்குறள் நமது சமகாலத்தில் கொண்டாடப்படுவதுபோல ஆட்சி அதிகார அமைப்புகளால் ஒருபோதும் கொண்டாடப்பட்டிருக்கவில்லை. இத்தகைய முன்னெடுப்பு மக்களாட்சியில் மட்டும்தான் சாத்தியம். திருக்குறளைத் தனது தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடிய ஒரு பேரரசனின் பெயரை நம்மால் நினைவுகூர முடியுமா? ஏனெனில், திருக்குறள் அடிப்படையில் குடிமக்களின் குரலாகவே ஒலிக்கிறது. அதனால்தான், 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான்' என்று பகிர்தல் அறம் பற்றி அவ்வளவு உறுதியான குரலில் உரத்துப் பேச முடிகிறது; 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்ற சொல்லாடல் பகிர்ந்துகொள்ளுதல் அறத்தின் அடிநாதம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது சமத்துவக் குரல். கேடில் விழுச்செல்வம் கல்வி மட்டும்தான் என்ற புரிதல்தான் கல்விப் பரவலாக்கம் என்கிற இலக்கில் நம்மை வழிநடத்தும் தெளிவு.

**வாசல்தோறும் வள்ளுவம்**

அச்சுக்கலையின் வரவுக்குப் பின்னால், அதிலும் குறிப்பாக மக்களாட்சி என்ற மாண்பு நமது சமுதாயத்தில் மலர்ந்ததற்குப் பின்னால் திருக்குறள் மக்களைச் சென்றுசேர்ந்திருக்கிறது. பேருந்துகளில் திருக்குறளை எழுதிவைத்தது வெறும் குறியீடு அல்ல. ஆகச் சிறந்த மக்கள் இலக்கியத்தை மக்களின் அருகே கொண்டு செல்லும் திட்டமிடப்பட்ட செயல். பாடத்திட்டத்தில் திருக்குறள். பேருந்து, ஆட்டோ நிறுத்தங்களில் திருக்குறள், திருமண அழைப்பிதழ்களில் திருக்குறள், இணையத்தில் ஏராளமான திருக்குறள் செயலிகள். இப்படி வாசல்தோறும் வள்ளுவம் தெளிக்கப்படுகிறது என்ற உணர்வு உற்சாகமளிக்கிறது.

இதற்கிடையில், அடையாளங்களைக் கடந்த திருவள்ளுவர் மீது 'புற அடையாளங்களை' இட்டுக்கட்டி நிரப்பி, கையகப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. ஆனாலும் இது புதிதும் அல்ல. மக்கள் 'அய்யன்' என்று அன்புடன் அணுக்கமாக அழைக்கும் திருவள்ளுவரின் இயற்பெயர் 'மாதானுபங்கி' என்று கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்துவிட்ட காலத்திலிருந்தே இந்த மடைமாற்று முயற்சிகள் தொடங்கிவிட்டன.

**பொதுமுறை**

'தமிழ் வேதமாகிய திருக்குறள்' என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில்தான் திருக்குறளை 'பொதுமறை' என்று அழைக்கும் மரபு தொடங்கியது. வேதம் என்பது மறைபொருள். உலகப் பொதுமறை என்பதில் திருக்குறள் ஒரு குறிப்பிட்ட சமய வட்டத்துக்குள் நின்று பேசவில்லை என்று உணர்த்த நாம் விரும்புகிறோம். ஆனால், யதார்த்த உலகம் வேறு வகையில் இயங்குகிறது. இங்கே மறையாக, மறைபொருளாக, மறைவாக இயங்கும் எதுவும் பொதுவாக இருப்பதில்லை. உண்மையில், பொதுவாக இருக்கும் எதுவும் மறையாக, மறைவாக இருப்பது இல்லை. அதனால் திருக்குறளைப் 'பொதுமறை' என்பதைவிட 'பொதுமுறை' என்பதே பொருத்தம் என்றுகூடத் தோன்றுகிறது.

'முறை' என்கிற சொல் குடும்பம், சுற்றம், உற்றார் உறவினர், ஒழுங்கு, சட்டம், வழக்கம், வாடிக்கை மரபு, இயல்பு, கட்டளை, நீதி போன்ற பொருள்களில் சமூக அமைப்பில் உள்ள பல்வேறு படிநிலைகளையும் தழுவிய சொல்லாகத் தனிமனிதரில் தொடங்கி ஆட்சி வரை விரிவான, ஆழமான பொருட்பரப்பைக் கொண்டது. திருக்குறளில் 'முறை' என்ற சொல் 13 குறட்பாக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசாட்சியின் ஆணிவேரான அடிப்படையே அரசனின் 'முறைசெய்து காப்பாற்றும்' அறமும் திறனும்தான்.

அடையாளங்களுக்கு அப்பால் நின்று பேசுவது போன்ற மெய்யறிவும் விடுதலையும் வேறு எதுவும் இருக்கிறதா? அது வள்ளுவன் தனக்குள் உணர்ந்த உலகப் பொறுப்பு. எல்லைகளற்றது வானம். அதனால்தான் அது அழகாக இருக்கிறது. தமிழ்ச் சமூகத்தை வழிநடத்துவது திருக்குறள் என்னும் திசைகாட்டும் கருவிதான். திருக்குறள் உண்மையில் திருவள்ளுவர் என்கிற தனிமனிதரின் குரல் அல்ல; ஓர் உயர் நாகரிகத்தின் ஒட்டுமொத்தத் தெளிவின் திரள்.

# பொங்கல் பரிசுத் தொகுப்பு: ஜன.3 முதல் டோக்கன்

## கரும்பு கொள்முதலுக்கு மாவட்ட அளவில் குழு

**சென்னை, டிச.31:** பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறவுள்ள பயனாளிகளுக்கு வரும் 3-ஆம் தேதி முதல் டோக்கன்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

பரிசுத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கரும்பினை கொள்முதல் செய்ய மாவட்ட அளவில் குழு அமைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நா.சுப்பையன் அறிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகள்:

பொங்கல் பரிசுத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பச்சரிசி, சர்க்கரை ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகளுக்கு அனுப்ப வேண்டும். பொங்கல் பரிசுத் தொகுப்பை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய ஏதுவாக, பரிசுத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பொருள்கள் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் சென்றடைவதை கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

பரிசுத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கரும்பை கொள்முதல் செய்ய மாவட்ட அளவில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியர் இருப்பார். வேளாண்மைத் துறை இணை இயக்குநர், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர். சென்னை மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் தலைவராகவும், உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையர் உறுப்பினராகவும் இருப்பார்.

**கரும்பு கொள்முதல் விலை:** கொள்முதல் செய்யப்படும் முழு கரும்பின் விலை அதிகபட்சம் ரூ.35- ஆக இருக்க வேண்டும். இதில் வெட்டுக்கூலி, கட்டும் கூலி, ஏற்றி இறக்கும் செலவு, போக்குவரத்து செலவு, விவசாயிகளுக்கு வழங்கும் தொகை உள்பட அனைத்தும் அடங்கி இருக்க வேண்டும். பிற மாநிலங்களில் கரும்பு கொள்முதல் கூடாது: கரும்பு கொள்முதல் செய்யும் போது அந்தந்த மாவட்ட விவசாயிகளிடம் இருந்து நேரடியாக வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலமாக கொள்முதல் செய்ய வேண்டும். இடைத்தரகர்களிடம் இருந்தோ, வியாபாரிகளிடம் இருந்தோ அல்லது பிற மாநிலங்களில் இருந்தோ கரும்பு கொள்முதல் செய்யாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். கரும்பு விளைவிக்கப்படாத மாவட்டங்களை பொருத்தவரையில் அருகாமையிலுள்ள மாவட்டங்களில் விளைவிக்கப்படும் கரும்பை கொள்முதல் செய்து கொள்ளலாம்.

ஒரு கிராமத்தில் ஒரே விவசாயிடமிருந்து ஒட்டுமொத்த கொள்முதலையும் மேற்கொள்ளக் கூடாது. மாறாக அந்த கிராமம் முழுவதிலும் பரவலாக கரும்பின் தரத்தின் அடிப்படையில் கொள்முதல் செய்ய வேண்டும். இதில் எந்தவித புகார்களுக்கும் இடமளிக்கக் கூடாது. கொள்முதல் செய்யும் போது சிறு, குறு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கான விலை அந்தந்த விவசாயிகளின் வங்கிக் கணக்குக்கு நேரடியாக செலுத்தப்பட வேண்டும்.

**முழுக் கரும்பை வழங்க வேண்டும்:** கொள்முதல் செய்யப்படும் கரும்பு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். கரும்பின் நுனியில் இருக்கும் தோகையை வெட்டாமல் முழு கரும்பையும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க வேண்டும். கரும்பு வழங்குவதில் எந்தவிதமான புகார்களுக்கும் இடமளிக்காமல் விநியோகம் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான டோக்கன்களை வீடு வீடாக விநியோகிக்கும் பணி வரும் 3-ஆம் தேதி முதல் தொடங்கப்படவுள்ளது. பொங்கல் பரிசுத் தொகுப்பு நியாய விலைக் கடைகளில் வரும் 9-ஆம் தேதி முதல் விநியோகம் செய்யப்படவிருக்கிறது. இதற்கு முன்பாக, டோக்கன்கள் விநியோகிக்கும் பணியை நிறைவு செய்ய கூட்டுறவு மற்றும் உணவுத் துறை திட்டமிட்டுள்ளது.

# தமிழகத்தில் புதிய வகை நிமோனியா பாதிப்பு இல்லை: சுகாதாரத் துறை

**சென்னை, டிச.31:** தமிழகத்தில் புதிய வகை நிமோனியா காய்ச்சல் பாதிப்பு இல்லை என்று பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் தெரிவித்தார்.

பருவமழை காலத்தில் பரவும் இன்ஃப்ளுயன்ஸா, டெங்கு, நிமோனியா பாதிப்புகள் மாநிலம் முழுவதும் பரவலாக காணப்படுகின்றன.

இந்நிலையில், வாக்கிங் நிமோனியா என்ற ஒரு வகை காய்ச்சல் 5 வயது முதல் 17 வயதுக்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பருவத்தினரை தாக்குவதாக செய்திகள் வெளியாகின. சளி, இருமல், தொண்டை வலி, காய்ச்சல், உடல் சோர்வு ஆகியவை அதன் முக்கிய அறிகுறிகளாகக் கூறப்படுகிறது.

வழக்கமான நிமோனியா காய்ச்சலைக் காட்டிலும் இது தீவிர பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக மருத்துவர்கள் சிலர் தெரிவித்திருந்தனர்.

புதிய வகை பாதிப்பு அச்சத்தை ஏற்படுத்தி வரும் சூழலில், பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் இதுதொடர்பாக விளக்கமளித்துள்ளார். அவர் கூறியதாவது: தமிழகத்தில் வழக்கமான பருவ கால காய்ச்சல்கள்தான் கண்டறியப்பட்டுள்ளன. மாறாக புதிய வகை பாதிப்பு எதுவும் இல்லை. எனவே, மக்கள் அச்சப்படத் தேவையில்லை. வாக்கிங் நிமோனியா எனக் கூறப்படும் காய்ச்சலை ஒரு பாதிப்பாக பொது சுகாதாரத் துறை அங்கீகரிக்கவில்லை. அந்த அறிகுறிகளுடன் ஏற்படும் காய்ச்சல், வழக்கமான ஒன்றுதான். புதிய பெயர்களைக் கூறி எவரும் பொது மக்களை அச்சுறுத்த வேண்டாம். விழிப்புணர்வுடனும், பாதுகாப்புடனும் இருந்தால் காய்ச்சல் பாதிப்புகளைத் தவிர்க்கலாம் என்றார் அவர்.

# 2024-ம் ஆண்டில் அரசு பணிக்கு 10,701 பேர் தேர்வு

## தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தகவல்

**சென்னை**

கடந்த 2024-ம் ஆண்டில் தமிழக அரசின் வெவ்வேறு பணிகளுக்கு 10,701 பேர் தேர்வு செய்யப்பட்டதாக டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் எஸ்.கோபால சுந்தரராஜ் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) வாயிலாக கடந்த 2022 மற்றும் 2023-ம் ஆண்டுகளில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு 30 தேர்வுகளின் மூலம் 2024-ம் ஆண்டில் 10,701 பேர் பல்வேறு பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வர்களின் நலன் கருதி குருப்-2ஏ மெயின் தேர்வு மற்றும் குருப்4 தேர்வுக்கான பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. குருப்-2 தேர்வு மற்றும் தொழில்நுட்ப தேர்வுகளில் சம்பள ஏற்ற முறை 17 முதல் 20 வரையுள்ள பதவிகளுக்கு நேர்முகத்தேர்வு முறை ரத்து செய்யப்பட்டுள்ளது.

அரசு துறைகளின் தேவைக்கேற்பவும், தொழில்நுட்ப முன்னேற்றங்களை பாடத்திட்டத்தில் சேர்க்கவும், ஒருங்கிணைந்த தொழில்நுட்பத் தேர்வுகளில் 31 பாடத்தாள்களுக்கான பாடத்திட்டங்கள் புதியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. 34 பாடத்தாள்களுக்கான பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தேர்வுகள் தொடர்பான செய்திகள் மற்றும் தகவல்களை தேர்வர்கள் உடனுக்குடன் தெரிந்துகொள்வதற்காக தேர்வாணையத்தின் அதிகாரப்பூர்வ எக்ஸ் தளம் மற்றும் டெலிகிராம் சேனல் தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அதானி நிறுவனம் விண்ணப்பித்த ஸ்மார்ட் மீட்டர் டெண்டர் ரத்து

## தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை

**சென்னை, டிச. 31:** அதானி நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்கள் விண்ணப்பித்த ஸ்மார்ட் மீட்டர் கொள்முதலுக்கான ஒப்பந்தப்புள்ளியை தமிழ்நாடு மின்சார வாரியம் ரத்து செய்துள்ளது.

நான்கு நிறுவனங்களில் அதானி நிறுவனம் குறைந்த விலைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தாலும், அது மின்வாரிய கொள்முதல் நிதிக்கு அதிகமாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படுவதாகவும், இதைத் தொடர்ந்து, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மின் வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வீடுகளில் ஸ்மார்ட் மின் மீட்டர் பொருத்த மாநில அரசு முடிவு செய்தது. இந்த ஸ்மார்ட் மீட்டர் பொருத்தினால் மின்வாரிய ஊழியர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் கணக்கெடுக்க செல்ல வேண்டியதில்லை. ஸ்மார்ட் மீட்டர் இணைப்புமூலம் மின்வாரியத்தின் கணினி மூலமாகப் பார்த்து நுகர்வோருக்கு மின் கட்டணத்தை கைப்பேசி வாயிலாகத் தெரிவிக்க முடியும்.

**அதானி நிறுவனம்:** முதற்கட்டமாக 8 மாவட்டங்களுக்கு 82 லட்சம் ஸ்மார்ட் மின் மீட்டர்களை கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. நான்கு நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பம் செய்திருந்தன. இதில் அதானி நிறுவனமும் (அதானி எனர்ஜி சொல்யூஷன்ஸ் லிமிடெட்) அடங்கும்.

நான்கு நிறுவனங்களில் அதானி நிறுவனம் குறைந்தபட்ச விலையை நிர்ணயித்து விண்ணப்பம் செய்திருந்தது. பிற மாநிலங்களில் உத்தேசமாக ஒரு மீட்டருக்கு ரூ.170 வழங்கப்பட்டு வரும் நிலையில் தமிழகத்தில் ரூ.240-க்கு வழங்கப்படும் என அதானி நிறுவனத்தின் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான மீட்டர்கள் வழங்கும்போது, மீட்டருக்கு ரூ.190 என்ற விலையில் வழங்கப்படும் எனவும், பிற மாநிலங்கள் போல் ரூ.170-க்கு வழங்கப்படாது எனவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஸ்மார்ட் மின் மீட்டர் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளியை டிச. 28-ஆம் தேதி ரத்து செய்ததாக தமிழ்நாடு மின்சார வாரியம் தெரிவித்துள்ளது. அதானி நிறுவனம் குறைந்த விலைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தாலும், அந்தத் தொகை மின்வாரிய கொள்முதல் நிதிக்கு அதிகமாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படுவதாக மின்வாரியம் விளக்கம் அளித்துள்ளது. ஸ்மார்ட் மீட்டர் கொள்முதலுக்கான ஒப்பந்தப்புள்ளி மீண்டும் கோரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஸ்மார்ட் மீட்டரின் அம்சங்கள்:** ஸ்மார்ட் மீட்டர் என்பது மின் பயன்பாட்டையும் அதற்கு உரிய கட்டணத்தையும் இணையத்தின் உதவியுடன் துல்லியமாகக் கணக்கிட பொருத்தப்படும் மீட்டராகும்.

ஸ்மார்ட் மீட்டர் மூலம் தானாக மின் பயன்பாட்டு கணக்குகள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும். தற்போது பொருத்தப்பட்டிருக்கும் மீட்டர்களில் மின் பணியாளர் ஒருவர் நேரில் வந்து, பயன்பாட்டுக் கணக்கை அட்டையில் குறிக்க வேண்டும். ஸ்மார்ட் மீட்டர் மூலம் அந்த நடைமுறை தேவைப்படாது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழக அலுவலகத்தில் இருக்கும் கணினியில், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட தேதியில் கணக்குகள் பதிவேற்றம் ஆகிவிடும்.

தமிழகத்தில் மின் பயன்பாட்டை அளவிடுதல், கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள 13,000 பேர் இருந்தனர். அதில், 7,000-க்கும் மேற்பட்ட இடங்கள் காலியாக உள்ளன. ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்படுவதன் மூலமாக, மின் பயன்பாட்டை அளவிடும் பணியாளர்களின் பணிச் சுமை பெருமளவு குறையும். அதேவேளையில், அளவீட்டாளர்களை புதிதாக நியமிக்க வேண்டியது இருக்காது என்ற கருத்தும் உள்ளது.

**இந்திய அரசியலமைப்பு மற்றும் இந்தியாவின் மீது உலகலாவிய அரசியல் மாற்றங்களின் தாக்கம்**
(Indian Polity and Emerging Political Trends across the World affecting India)

# நல்லாட்சி வாரம்: அரசின் சேவைகள் தொடர்பான 3 கோடி விண்ணப்பங்களுக்கு தீர்வு

**புது தில்லி, டிச. 31:** நல்லாட்சி வாரத்தையொட்டி, அரசின் சேவை வழங்கலை மேம்படுத்தும் வகையில் நாடு முழுவதும் நடைபெற்ற பிரசாரத்தில் பொதுமக்களின் சுமார் 3 கோடி விண்ணப்பங்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பிறந்த தினம் (டிச.25), நல்லாட்சி தினமாக கடந்த 2014-ஆம் ஆண்டில் இருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இத்தினத்தை முன்னிட்டு ஒரு வாரத்துக்கு நல்லாட்சி வாரம் கடைப்பிடிக்கபடுகிறது.

நடப்பாண்டு வாஜ்பாயின் 100-ஆவது பிறந்த தினம் கடந்த டிச.25-ஆம் தேதி கொண்டாடப்பட்ட நிலையில், டிச.19 முதல் 24 வரை நல்லாட்சி வாரம் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நாள்களில், மத்திய அரசு சார்பில் 'கிராமங்களை நோக்கிய நிர்வாகம்' என்ற பெயரில் நாடு முழுவதும் பிரசாரம் நடத்தப்பட்டது.

அரசு நிர்வாகத்தை அடிப்படை அளவில் எளிதாக்குவதோடு, சேவை வழங்கலை மேம்படுத்தும் நோக்கில் 700-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட இப்பிரசாரத்தில் பொதுமக்களின் சுமார் 3 கோடி விண்ணப்பங்கள் மீது தீர்வு காணப்பட்டதாக, மத்திய நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்பு துறை செயலர் வி.ஸ்ரீனிவாஸ் தெரிவித்தார்.

அவர் கூறுகையில், 'நாட்டின் அமைப்புமுறையில் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்ய வேண்டுமென்ற பிரதமர் மோடியின் தொலைநோக்கு பார்வையை செயல்படுத்தவும், ஒவ்வொரு நிலையிலும் நடைமுறைகளை எளிமையாக்கி அவற்றை விரைவுபடுத்தவும் பல்வேறு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, பொதுமக்களின் குறைத்தீர்ப்பு மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்தும் வழிமுறைகள் விரிவுபடுத்தப்பட்டு, செயல்திறன் மிக்கதாக உருவாக்கப்பட்டுள்ளன.

அரசு மற்றும் குடிமக்கள் இடையிலான பிணைப்பை அதிகரிப்பதோடு, அரசின் தினசரி செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதிசெய்யும் சக்திவாய்ந்த கருவியாக தொழில்நுட்பம் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

'கிராமங்களை நோக்கிய நிர்வாகம்' பிரசாரத்தின்கீழ், சேவை வழங்கல் பிரிவில் 2.99 கோடி விண்ணங்களுக்கும், பொதுமக்கள் குறைதீர்ப்பு பிரிவில் சுமார் 19 லட்சம் விண்ணப்பங்களுக்கும் தீர்வு காணப்பட்டது. தலைமைச் செயலர்கள், துறைசார் முதன்மைச் செயலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்டோர் இப்பிரசாரத்தில் முன்னிலை வகித்தனர். வீட்டு வாயிலுக்கே சென்று அரசின் சேவைகளை வழங்குவதில் இது திருப்புமுனை நிகழ்வு என்றார் வி.ஸ்ரீனிவாஸ்.

# பாகிஸ்தான்: லாகூர் பூஞ்ச் மாளிகையில் பகத் சிங் கண்காட்சி அரங்கு திறப்பு

**லாகூர், டிச.31:** பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத் தலைநகர் லாகூரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பூஞ்ச் மாளிகையில் சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங் நினைவு கண்காட்சியை அந்த மாகாண அரசு பொதுமக்களின் பார்வைக்கு திறந்துள்ளது.

இந்த கண்காட்சி அரங்கில் பகத் சிங்கின் சுதந்திரப் போராட்டத்தை விளக்கும் வரலாற்று ஆவணங்கள், படங்கள், கடிதங்கள், செய்தித்தாள்கள் மற்றும் பிற நினைவுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

கண்காட்சி அரங்கை கடந்த திங்கள்கிழமை திறந்து வைத்து மாகாண தலைமைச் செயலர் ஜாஹித் அக்தர் ஜமான் கூறியதாவது: தொழில்துறை மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கு இடையே கையொப்பமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பூஞ்ச் மாளிகைக்கு சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த பூஞ்ச் மாளிகை, அதன் அசல் வடிவத்துக்கு மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இங்கு திறக்கப்பட்டுள்ள புதிய கண்காட்சி அரங்கில் பகத் சிங்கின் சுதந்திரப் போராட்டம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.



பாகிஸ்தானின் லாகூர் நகரில் அமைக்கப்பட்டுள்ள பகத் சிங் நினைவு கண்காட்சி.

ஆங்கிலேயர் ஆட்சியில், காவல் துறை அதிகாரியை கொன்றதற்காக பகத் சிங் உள்பட மூவருக்கு எதிராக தொடரப்பட்ட தேசத் துரோக வழக்கின் விசாரணை பூஞ்ச் மாளிகையில் தான் நடைபெற்றது. வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி, 23 வயதே நிரம்பிய பகத் சிங், லாகூரில் 1931-ஆம் ஆண்டு, மார்ச் 23-ஆம் தேதி தூக்கிலிடப்பட்டார்.

பகத் சிங்குக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட தீர்ப்பின் நகல் உள்ளிட்ட சில முக்கிய ஆவணங்களை பஞ்சாப் மாகாண ஆவணக் காப்பகத் துறை கடந்த 2018-ஆம் ஆண்டு முதன்முறையாக வெளியிட்டது.

சிறையிலிருந்தபோது நீதிமன்ற உத்தரவை வழங்குமாறும், தந்தையை சந்திக்கவும், தினசரி படிப்பதற்கு நாளிதழ்கள் மற்றும் புத்தகங்களை அளிக்க அனுமதிக்கக் கோரியும் பகத் சிங் தாக்கல் செய்த மனுக்கள் கண்காட்சி அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், பகத் சிங் நினைவு அறக்கட்டளையின் தலைவரும் வழக்குரைஞருமான இம்தியாஸ் ரஷீத் குரேஷி அளித்த பேட்டியில், 'பஞ்சாப் அரசு பகத் சிங் கண்காட்சி அரங்கை திறந்திருக்கிறது. அதேபோல், லாகூரில் பக்த் சிங் தூக்கிலிடப்பட்ட இடமான ஷாத்மன் சௌக் பகுதியை அவரது நினைவாக மறுபெயரிட வேண்டும். இதுகுறித்து அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்' என்றார்.

## இளம் தலைமுறையினருக்கு ஊக்கம்

# 'ஐஎன்எஸ்வி தாரிணி' பெண் அதிகாரிகளுக்கு கடற்படை தலைமைத் தளபதி புகழாரம்

**புது தில்லி, டிச.31:** 'இந்திய கடற்படை கப்பலான (ஐஎன்எஸ்வி) தாரிணியில் இரு பெண் அதிகாரிகள் உலகை சுற்றிப் பயணித்து வருவது இளம் தலைமுறையினருக்கு ஊக்கம் அளிக்கும்' என கடற்படை தலைமைத் தளபதி தினேஷ் கே.திரிபாதி செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

'நாவிகா சாகர் பரிக்ரமா-2' முன்னெடுப்பின் கீழ் ஐஎன்எஸ்வி தாரிணியில் தில்னா மற்றும் ரூபா ஆகிய இரு பெண் அதிகாரிகள் உலகம் முழுவதும் பயணித்து வருகின்றனர். கடந்த அக்டோபர் மாதம் கோவாவில் இருந்து தங்கள் பயணத்தை தொடங்கிய இந்த இரு அதிகாரிகள், உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பயணித்துவிட்டு மீண்டும் கோவாவுக்கு திரும்பவுள்ளனர்.

அந்த வகையில், முதல்கட்டமாக அவர்கள் ஆஸ்திரேலியாவை சென்றடைந்தனர். அந்நாட்டில் உள்ள ஃப்ரீமேண்டில் நகரில் இருந்து நியூசிலாந்தில் உள்ள லிட்டல்டன் நகரை நோக்கி கடந்த நவம்பர் 24-ஆம் தேதி இரண்டாம் கட்ட பயணத்தை தொடங்கினர்.

அவர்களிடம் தினேஷ் கே.திரிபாதி மற்றும் அவரது மனைவியும் கடற்படை அதிகாரிகள் நலச் சங்கத்தின் தலைவருமான ஷாஷி திரிபாதி காணொலி வாயிலாக கலந்துரையாடினர்.

அப்போது, இரு பெண் அதிகாரிகள் மேற்கொள்ளும் பயணத்தில் உள்ள சவால்கள் குறித்து கேட்டறிந்தனர். துணிச்சல், அர்ப்பணிப்பு உணர்வுடன் அவர்கள் மேற்கொள்ளும் பயணம் இந்தியா மட்டுமின்றி உலகளவில் இளம் தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும் என திரிபாதி மற்றும் ஷாஷி தெரிவித்தனர்.

# பிரிட்டன் அரசர் சார்லஸின் புத்தாண்டு விருது: 30 இந்திய வம்சாவளியினர் தேர்வு

**லண்டன், டிச. 31:** பிரிட்டன் அரசர் சார்லஸின் புத்தாண்டு விருதுகளுக்கு சுகாதாரம், கல்வி மற்றும் தன்னார்வ சேவை ஆகிய பல்வேறு துறைகளில் முன்மாதிரியாக விளங்கும் 30 இந்திய வம்சாவளியினர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

புத்தாண்டையொட்டி கடந்த திங்கள்கிழமை இரவு வெளியிடப்பட்ட அரசரின் 2025-ஆம் ஆண்டு கௌரவ விருதுப் பட்டியலில், மொத்தம் 1,200-க்கும் மேற்பட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்திய வம்சாவளியை சேர்ந்த 'கன்சர்வேடிவ்' கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் மால்கம் ஜெயவர்தனே, லண்டன் மேயர் சாதிக் கான் உள்ளிட்டோருக்கு அரசியல் மற்றும் பொது சேவைக்காகவும் சமீபத்தில் பொறுப்பிலிருந்து விலகிய இங்கிலாந்து ஆண்கள் கால்பந்து அணியின் முன்னாள் மேலாளர் கேரத் செளத்கேட்டுக்கு விளையாட்டுத் துறை பங்களிப்புக்காகவும் உயரிய 'நைட்ஹுட்' விருது வழங்கப்பட்டுள்ளது.



ஸ்னேஹ் கேம்கா



லீனா நாயர்



பூர்ணிமா மூர்த்தி தனுகு



மயங்க் பிரகாஷ்

இந்திய வம்சாவளியினரான சாத்வந்த் கௌர் தியோல் (கல்வி), சார்லஸ் ப்ரீதம் சிங் தனோவா (சட்டம்) ஸ்னேஹ் கேம்கா (சுகாதாரம்), லீனா நாயர் (வர்த்தகம்), மயங்க் பிரகாஷ் (பொதுச் சேவை), பூர்ணிமா மூர்த்தி தனுகு (கல்வி) உள்பட 30 பேர் அரசரின் புத்தாண்டு விருதுகளுக்கு தேர்வாகியுள்ளனர்.

**பிரிட்டன் பிரதமர் வாழ்த்து:** வெற்றியாளர்களுக்கு பிரிட்டன் பிரதமர் கியெர் ஸ்டார்மர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், 'புத்தாண்டு விருதுகள் பட்டியல், புகழின் வெளிச்சம் அறியாத பல நாயகர்களைக் கொண்டாடுகிறது.

வெற்றியாளர்களின் சிறந்த சமூகப் பங்களிப்புக்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டன் அரசு தகவலின்படி, புத்தாண்டு விருது அறிவிக்கப்பட்டுள்ளவர்களில் 54 சதவீதத்தினர் தங்கள் துறை சார்ந்து சமூகத்தில் சிறந்த தன்னார்வ பணிகளை மேற்கொண்டு வருபவர்கள் என்றும் 12 சதவீதத்தினர் சிறுபான்மையினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## என்எம்எம்எஸ் கல்வி உதவித்தொகை தேர்வு

# ஜன.24-ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பம்

சென்னை

கல்வி உதவித்தொகைக்கான என்எம்எம்எஸ் தேர்வுக்கு மாணவர்கள் ஜன.24-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என தேர்வுத் துறை அறிவித்துள்ளது.

மத்திய அரசின் தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்பு உதவித்தொகை திட்டத்தின் (என்எம்எம்எஸ்) கீழ் அரசு, அரசு உதவி பள்ளிகளில் 8-ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் தேர்வு நடத்தப்படும். இந்த தேர்வின் மூலம் தமிழகத்தில் 6,695 பேர் உட்பட நாடு முழுவதும் ஒரு லட்சம் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். அவர்களுக்கு 9-ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும்.

அதன்படி நடப்பு கல்வியாண்டுக்கான என்எம்எம்எஸ் தேர்வு பிப். 22-ம் தேதி நடத்தப்பட உள்ளது. இந்த தேர்வுக்கு 8-ம் வகுப்பு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கான இணையதள விண்ணப்ப பதிவு நேற்று தொடங்கியது. விருப்பமுள்ளவர்கள் தேர்வுத் துறை இணையதளத்தில் (dge.tn.gov.in) விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.

பூர்த்தி செய்த படிவங்களை தேர்வுக் கட்டணம் ரூ.50-ஐ சேர்த்து தாங்கள் படிக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் ஜன. 24-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

# நீர்மூழ்கி கப்பல்களை மேம்படுத்த ரூ.2,867 கோடி பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்பந்தம்

புதுடெல்லி

கடற்படையில் உள்ள நீர் மூழ்கி கப்பல்களில், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம்(டிஆர்டிஓ) உருவாக்கிய ஏர் இன்டிபென்டன்ட் புரொபல்ஷன் (ஏஐபி) இயந்திரத்தை பொருத்தவும், கல்வாரி ரக நீர்மூழ்கி கப்பல்களில் எலக்ட்ரானிக் ஹெவி வெயிட் டார்பிடோவை (இஎச்டபிள்யுடி) இணைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

ஏஐபி இயந்திரத்தை பொருத்த மும்பை மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்துடன் ரூ.1,990 கோடி மதிப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கடற்படை நீர்மூழ்கி கப்பல்களில் ஏஐபி இயந்திரத்தை பொருத்துவதற்கான மாற்றங்கள் செய்யப்படும். ஏஐபி தொழில்நுட்பம் நீர்மூழ்கி கப்பல்களில் பொருத்துவதன் மூலம், அவை கடலுக்கடியில் நீண்ட காலம் இருக்க முடியும். வழக்கமாக டீசல் இன்ஜின் நீர்மூழ்கி கப்பல்களுக்கு தேவையான காற்றை ஸ்னார்கெல் என்ற பைப் மூலம் பெற நீர்மூழ்கி கப்பல்கள் குறிப்பிட்ட தூரம் கடலில் மேற்பகுதிக்கு வரும். ஏஐபி பொருத்துவதன் மூலம், நீர்மூழ்கி கப்பல்கள் கடலின் மேற்பரப்புக்கு வரத் தேவையில்லை.

**எலக்ட்ரானிக் டார்பிடோ**

கல்வாரி ரக நீர்மூழ்கி கப்பல்களில் நவீன எலக்ட்ரானிக் ஹெவி வெயிட் டார்பிடோ (இஎச்டபிள்யுடி) பொருத்த பிரான்ஸ் நாட்டின் நேவல் குரூப்புடன் ரூ.877 கோடி மதிப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் டார்பிடோ நீண்ட தூரம், அதிவேகத்தில் சென்று எதிரியின் இலக்கை தகர்க்கும். மேலும், இந்த டார்பிடோ நீர்மூழ்கிகப்பல்களில் இருக்கும் போது எந்த சூழ்நிலையிலும் வெடிக்காது. நீர்மூழ்கி கப்பலில் தீ விபத்து ஏற்பட்டால் கூட வெடிக்காத வகையில் இந்த இச்டபிள்யுடி தயாரிக்கப்படுகிறது. இந்த டார்பிடோ பிரான்ஸ் தொழில்நுட்பத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நீர்மூழ்கி கப்பல்களின் மேம்பாட்டுக்காக பாதுகாப்புத்துறை அமைச்சகம் மேற்கொண்ட 2 ஒப்பந்தங்களும் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

# சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதத்தில் மாற்றமில்லை

**மத்திய அரசு**

**புது தில்லி, டிச. 31:** நடப்பு 2024-25-ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டிலும் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதங்கள் மாற்றமில்லாமல் தொடரும் என்று மத்திய நிதியமைச்சகம் செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

இதன்படி, ஜனவரி 1 முதல் மார்ச் 30-ஆம் தேதி வரையிலான காலாண்டில் முந்தைய மூன்று மாதங்களில் இருந்த வட்டி விகிதமே தொடரும்.

இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கையில், 'பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்புத் திட்டத்துக்கு 8.2 சதவீத வட்டி வழங்கப்படும். 3 ஆண்டு நிரந்தர வைப்புக்கான வட்டி விகிதம் 7.1 சதவீதமாக நீடிக்கும். பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி 7.1 சதவீதமாகவும், அஞ்சலக சேமிப்புக் கணக்கு வட்டி 4 சதவீதமாகவும் இருக்கும்.

115 மாதங்களில் முதிர்வடையும் 'கிஸான் விகாஸ்' நிதி பத்திரத்துக்கான வட்டி 7.5 சதவீதம் என்ற அளவில் தொடர்ந்து வழங்கப்படும். தேசிய சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி 7.7 சதவீதமாக தொடரும், மாதந்தோறும் வட்டி வழங்கப்படும் நிரந்தர வைப்புக்கு 7.4 சதவீதம் வட்டி கிடைக்கும்' என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டின் இறுதியில் சில சேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் மாற்றி அமைக்கப்பட்டது. அதன்பிறகு, கடந்த ஓராண்டாக சிறுசேமிப்புகளுக்கான வட்டி விகிதம் மாற்றமின்றியே தொடர்கிறது. அஞ்சலகங்கள் மற்றும் வங்கிகளில் மேற்கொள்ளப்படும் சிறுசேமிப்புகளுக்கான வட்டி விகிதத்தை ஒவ்வொரு காலாண்டிலும் மத்திய அரசு அறிவித்து வருகிறது.

# நவம்பர் இறுதியில் 52.5 சதவீதத்தை எட்டிய நிதிப் பற்றாக்குறை

**மத்திய அரசு தகவல்**

**புது தில்லி, டிச.31:** 2024-25-ஆம் நிதியாண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையில் 52.5 சதவீதத்தை நவம்பர் மாத இறுதியில் எட்டியதாக மத்திய அரசு செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

அரசின் செலவுக்கும் வருவாய்க்கும் இடையே உள்ள வித்தியாசமே நிதிப் பற்றாக்குறை எனப்படுகிறது. இது அரசுக்கு தேவையான கடன் தொகையின் குறியீடாக கருதப்படுகிறது.

நிகழ் நிதியாண்டுக்கான (2024-25) மத்திய அரசின் மொத்த நிதிப் பற்றாக்குறை ரூ.16.13 லட்சம் கோடியாக இருக்கும் என கணிக்கப்பட்ட நிலையில், ஏப்ரல்-நவம்பர் காலகட்டத்தில் ரூ.8.47 லட்சம் கோடியை (52.5 சதவீதம்) எட்டியதாக தலைமை கணக்கு கட்டுப்பாட்டாளர் (சிஜிஏ) வெளியிட்ட தரவுகளில் தெரிவிக்கப்பட்டன.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கடந்த 2023-24-ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) நிதிப் பற்றாக்குறை 5.6 சதவீதமாக இருந்தது. இதை நிகழ் நிதியாண்டில் 4.9 சதவீதமாக குறைக்க மத்திய பட்ஜெட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

நிதழ் நிதியாண்டின் முதல் எட்டு மாதங்களில் மத்திய அரசின் வரி வருவாய் ரூ.14.43 லட்சம் கோடியை எட்டியது. இதே காலகட்டத்தில் மத்திய அரசின் செலவினம் ரூ.27.47 லட்சம் கோடியாக உள்ளது. அதாவது பட்ஜெட் இலக்கில் 56.9 சதவீத நிதியை மத்திய அரசு செலவழித்துள்ளது.

மொத்த செலவினத்தில் வருவாய் செலவினம் ரூ.22.27 லட்சம் கோடியாகவும் மூலதன செலவினம் ரூ.5.13 லட்சம் கோடியாகவும் உள்ளது.

அதேபோல் மொத்த செலவினத்தில் அரசு பெற்ற கடன்களுக்கு வட்டியாக ரூ.6.58 லட்சம் கோடி செலுத்தப்பட்டுள்ளது. மானியங்களுக்கு ரூ.2.79 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

தினமணி தினகரன் தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ் தி இந்து தினமலர்

# 2024-இல் 210 பேர் கைது; 100 சதவீத தண்டனை விகிதம்: என்ஐஏ

**புது தில்லி, டிச.31:** நிகழாண்டில் குற்றஞ்சாட்டப்பட்ட 210 பேர் கைது செய்யப்பட்டதாக தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

சில வழக்குகளில் குற்றவாளிகளுக்கு 100 சதவீத தண்டனை விகிதத்தை உறுதிசெய்ததாகவும் என்ஐஏ தெரிவித்தது.

2024-இல் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து என்ஐஏ வெளியிட்ட செய்திக்குறிப்பில், '80 வழக்குகளில் தொடர்புடைய பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 210 பேர் கைது செய்யப்பட்டனர். அதிகபட்சமாக இடதுசாரி பயங்கரவாதம் தடுப்பு நடவடிக்கையாக 28 வழக்குகள் பதியப்பட்டு 69 பேர் கைது செய்யப்பட்டனர். இதே பிரிவில் 12 குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டு 64 பேர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

வடகிழக்கு பிராந்திய கிளர்ச்சி சார்ந்த 18 வழக்குகள் பதியப்பட்டன. இதில் 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதேபோல் 25 வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட 68 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டது. 408 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

**ரூ.19 கோடி பறிமுதல்:** பயங்கரவாதம், வன்முறை மற்றும் பிற குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தொடர்புடைய ரூ.19.57 கோடி மதிப்பிலான 137 சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

**காலிஸ்தான் பயங்கரவாதிகள்:** வெளிநாடுகளில் இருந்து இயங்கி வரும் காலிஸ்தான் பயங்கரவாதிகள் தொடர்புடைய வழக்குகளில் 101 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 14 பேர் கைது செய்யப்பட்டனர்.

பஞ்சாபில் விசுவ ஹிந்து பரிஷத் (விஹெச்பி) அமைப்பின் தலைவர்களில் ஒருவரான விகாஸ் பிரபாகர் கொலை வழக்கில் தொடர்புடைய பப்பார் கல்சா இன்டர்னேஷனல் (பிகேஐ) பயங்கரவாத அமைப்பின் தலைவர் வத்வா சிங் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த அமைப்பு பாகிஸ்தானில் செயல்பட்டு வருகிறது.

அதேபோல் ஐக்கிய அரபு அமீரகத்தில் பதுங்கியிருந்த பஞ்சாப் மாநிலம் தர்ன் தரன் மாவட்டத்தைச் சேர்ந்த தார்சிம் சிங் சாந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். நிகழாண்டில் பல்வேறு குற்றங்கள் தொடர்பாக மொத்தம் 662 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆயுதங்கள்:** நாட்டுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடும் நோக்கில் ஜம்மு, ஜெய்ப்பூர், ராஞ்சி, பாட்னா, சண்டீகர் ஆகிய பகுதிகளில் தேசவிரோத சக்திகள் பதுக்கி வைத்திருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த சோதனையின்போது சீன மற்றும் துருக்கி துப்பாக்கிகள், வெடி மருந்துகள், தோட்டாக்கள், டெட்டனேட்டர்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

**11 ஐஎஸ்எஸ் பயங்கரவாதிகள்:** 11 ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாதிகள், 5 ஜம்மு-காஷ்மீர் ஜிகாதிகள் மற்றும் 24 பிற ஜிகாதிகள் கைது செய்யப்பட்டனர். நாட்டை உலுக்கிய பெங்களூரு வெடிகுண்டு வழக்கில் (ராமேஸ்வரம் கஃபே வெடிகுண்டு சம்பவம்) தொடர்புடையவர்களை விரைவாக என்ஐஏ கண்டுபிடித்தது. பல்வேறு குற்ற வழக்குகளில் தேடப்பட்டு, தலைமறைவாக இருந்த 27 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் கேரளத்தில் பேராசிரியரின் கைகளை வெட்டிவிட்டு 13 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த சவாத் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**காவல் துறைக்கு பயிற்சி:** பயங்கரவாதம் மற்றும் பிற குற்றச் செயல்களை தடுப்பதில் மாநில காவல் துறையின் பங்களிப்பை மேம்படுத்தும் வகையில் 1,678 காவல் துறை அதிகாரிகளுக்கு என்ஐஏ சார்பில் பயிற்சி வழங்கப்பட்டது' என தெரிவிக்கப்பட்டது.

# வங்கதேச போராட்டம்: அரசு, மாணவர் அமைப்புகள் கருத்து வேறுபாடு அதிகரிப்பு

**டாக்கா, டிச. 31:** வங்கதேசத்தில் பிரதமர் ஷேக் ஹசீனாவை ஆட்சியிலிருந்து அகற்றிய போராட்டத்தின் அடிப்படை நோக்கம் தொடர்பாக, போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட மாணவர் அமைப்புகளுக்கும் இடைக்கால அரசு மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்துவருகின்றன.

கடந்த 1971-ஆம் ஆண்டில் இந்தியாவின் உதவியுடன் போரிட்டு வங்கதேசத்துக்கு பாகிஸ்தானிடமிருந்து சுதந்திரம் வாங்கித் தந்தவர்களின் வாரிசுகளுக்கு அரசுப் பணிகளில் 30 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்பட்டுவந்தது. மாணவர்களின் எதிர்ப்பால் அந்த இடஒதுக்கீடு நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 2024 ஜூலை மாதம் அந்த இடஒதுக்கீட்டை நிறுத்திவைத்த அரசின் உத்தரவை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.

அந்த தீர்ப்புக்கு எதிராக மாணவர்கள் மீண்டும் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர் (படம்). அவர்களுக்கு எதிராக இடஒதுக்கீட்டுக்கு ஆதரவான மாணவர் அமைப்பினரும் களமிறங்கியதையடுத்து வன்முறை வெடித்து நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். அதையடுத்து, சர்ச்சைக்குரிய இடஒதுக்கீட்டை 5 சதவீதமாக உச்சநீதிமன்றம் குறைத்தது.

இருந்தாலும், பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி அவரின் அதிகாரபூர்வ இல்லத்தை நோக்கி மாணவர்கள் கடந்த 2024 ஆகஸ்ட் 5-ஆம் தேதி ஊர்வலமாகச் சென்றனர். நிலைமை கைமீறிச் செல்வதை உணர்ந்த ஷேக் ஹசீனா, ராஜிநாமா செய்துவிட்டு பாதுகாப்புக்காக நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார்.



அதைத் தொடர்ந்து நிர்வாகத்தைக் கைப்பற்றிய ராணுவம், அடுத்த தேர்தல் நடத்தப்படும் வரை இடைக்கால அரசை அமைப்பதாக அறிவித்தது. இடைக்கால அரசின் தலைவராக நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் பொறுப்பேற்றார்.

புதிய அரசில், போராட்ட மரணங்கள் தொடர்பாக ஷேக் ஹசீனா மீதும் அவரது அமைச்சர்கள் மற்றும் பிற உதவியாளர்கள் மீதும் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.

ஹசீனா ஆட்சியின்போது ஊழல் உள்ளிட்ட வழக்குகளில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட வங்கதேச தேசியவாதக் கட்சி தலைவர் கலீதா ஜியா உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தச் சூழலில், 2024 ஜூலை மாதபோராட்டத்தை முன்னின்று நடத்திய பாரபட்சத்துக்கு எதிரான மாணவர் இயக்கம், தேசிய குடிமக்கள் குழு ஆகிய மாணவர் அமைப்புகள் கடந்த சனிக்கிழமை திடீரென கூடி, முந்தைய போராட்டத்தின் கொள்கைப் பிரகடனத்தை டாக்கா நகரிலுள்ள ஷஹீத் மினாரில் செவ்வாய்க்கிழமை (டிச. 31) அறிவிக்கவிருப்பதாக தெரிவித்தனர்.

இதற்கு அரசு தரப்பிலிருந்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதையடுத்து அவசரக்கூட்டம் நடத்திய அந்த அமைப்பினர், போராட்ட கொள்கைப் பிரகடனத்தை வெளியிடுவதற்குப் பதில் குறிப்பிட்ட தேதியில் 'ஒற்றுமைக்கான ஊர்வலம்' நடத்த விருப்பதாக அறிவித்தனர்.

அப்போது பேசிய மாணவர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஹஸ்னத் அப்துல்லா, '1972-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வங்கதேச அரசியல் சாசனம் ஜூலை போராட்டக் கொள்கைப் பிரகடனத்தில் செல்லாததாக அறிவிக்கப்படும். அந்தப் போராட்டத்தின் ஒரே நோக்கம், வங்கதேச அரசியல் சாசனத்தை ஒழிப்பதுதான்.

ஷேக் முஜிபுர் ரஹ்மானின் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் அந்த அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில்தான் வங்கதேசத்தில் இந்தியாவின் ஆதிக்கம் தொடங்கியது. ஜூலை போராட்டம் குறித்த எங்களது கொள்கைப் பிரகடனத்தில், தற்போதைய அரசமைப்புச் சட்டத்தால் வங்கதேச மக்களின் கனவுகள் எவ்வாறு நசுக்கப்பட்டன என்பது குறித்தும், புதிய அரசமைப்புச் சட்டத்தை நாங்கள் எவ்வாறு உருவாக்குவோம் என்பது குறித்தும் விளக்கப்படும்' என்றார்.

இந்த அறிவிப்பு, இடைக்கால அரசிலும், வங்கதேச அரசியல் கட்சிகள் இடையேயும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. தற்போது ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி அரசியல்ரீதியில் முடக்கப்பட்டுள்ளதால், எதிர்க்கட்சியாக இருந்த கலீதா ஜியாவின் வங்கதேச தேசியவாதக் கட்சி இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

லட்சக்கணக்கானவர்கள் ரத்தம் சிந்தி உருவாக்கிய அரசியல் சாசனம் நீக்கப்படக்கூடாது என்று அந்தக் கட்சி கூறியது.

இந்த நிலையில், ஜூலை போராட்டம் குறித்த கொள்கைப் பிரகடனத்தை அரசே வெளியிடும் என்று இடைக்கால அரசு செவ்வாய்க்கிழமை அறிவித்தது. எனினும், அரசியல் சாசனத்தை ரத்து செய்வது குறித்து அரசு எதையும் குறிப்பிடவில்லை.

எனவே, இந்த விவகாரத்தில் மாணவர் அமைப்புக்கும், அரசியல் சக்திகளுக்கும் இடையே கருத்துவேறுபாடுகள் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# மணிப்பூர் வன்முறை: மன்னிப்பு கோரினார் முதல்வர் பிரேன் சிங்

**இம்பால், டிச. 31:** மணிப்பூரில் இரு சமூகத்தினர் இடையே ஏற்பட்ட மோதலுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாக மாநில முதல்வர் பிரேன் சிங் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

அந்த மாநிலத்தில் உள்ள அனைத்து சமூகத்தினரும் ஒருவரையொருவர் மன்னித்தும், கடந்த கால தவறுகளை மறந்தும் புதிய வாழ்க்கையை தொடங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மணிப்பூரில் பெரும்பான்மையினராக உள்ள மைதேயி சமூகத்தினருக்கும், சிறுபான்மையினராக உள்ள குகி-ஜோ சமூகத்தினருக்கும் இடையே கடந்த ஆண்டு மே மாதம் மோதல் ஏற்பட்டது. இந்த வன்முறையில் இதுவரை 250-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர்.

இதையடுத்து, அந்த மாநிலத்தில் இரு சமூகத்தினருக்கும் இடையே தொடர்ந்து ஏற்பட்ட மோதலால், இன்றளவும் அங்கு முழுமையாக அமைதி திரும்பவில்லை.

இந்நிலையில், மாநிலத் தலைநகர் இம்பாலில் முதல்வர் பிரேன் சிங் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது: கடந்த 20 மாதங்களில் மாநிலத்தில் துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் குறைந்துள்ளன.

கடந்த ஆண்டு மே முதல் அக்டோபர் வரை, மாநிலத்தில் 408 துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் நடைபெற்றன. இந்த எண்ணிக்கை நிகழாண்டு மே முதல் தற்போது வரை 112-ஆக குறைந்துள்ளது.

காவல் நிலையங்களில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட ஆயுதங்களில் 3,112 ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேபோல 2,511 வெடிபொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. வன்முறை தொடர்பாக இதுவரை 625 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 12,047 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மாநிலத்தில் இரு சமூகத்தினர் இடையே ஏற்பட்ட மோதலுக்கு வருந்தி மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். அனைத்து சமூகத்தினரும் ஒருவரையொருவர் மன்னித்து, கடந்த கால தவறுகளை மறக்க வேண்டும்.

**'புதிய வாழ்க்கையை தொடங்க வேண்டும்':** கடந்த 3, 4 மாதங்களாக மாநிலத்தில் சற்று அமைதி நிலவுகிறது. இதன்மூலம், புத்தாண்டில் மாநிலத்தில் மீண்டும் இயல்பு நிலை திரும்பும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அமைதியான, வளமையான மணிப்பூரில் ஒன்றிணைந்து வாழ்வதன் மூலம், அனைவரும் புதிய வாழ்க்கையை தொடங்க வேண்டும் என்றார்.

**'பிரதமரும் மன்னிப்பு கேட்க வேண்டும்':** காங்கிரஸ் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திடம் கூறுகையில், 'மணிப்பூருக்கு பிரதமர் மோடி சென்று முதல்வர் பிரேன் சிங்கை போல, மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். தங்களை ஏன் பிரதமர் புறக்கணிக்கிறார் என்று மணிப்பூர் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்' என்றார்.

**மணிப்பூரில் 77% வன்முறை:** மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட ஆண்டறிக்கையில், 'கடந்த 2023-ஆம் ஆண்டில் வடகிழக்கு மாநிலங்களில் நடைபெற்ற மொத்த வன்முறை சம்பவங்களில் 77 சதவீதம் மணிப்பூரில் நடைபெற்றது. வன்முறைக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 33 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். 184 கிளர்ச்சியாளர்கள் கைது செய்யப்பட்டனர். கிளர்ச்சி அமைப்புகளைச் சேர்ந்த 80 பேர் சரணடைந்தனர்.

வன்முறையைக் கட்டுப்படுத்த தொடர்ந்தும், நிலையாகவும் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டது.



மணிப்பூர் தலைநகர் இம்பாலில் செய்தியாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை பேட்டியளித்த முதல்வர் பிரேன் சிங்.

## பாதுகாப்புப் படையினர் தடியடி; கண்ணீர் புகைக் குண்டுவீச்சு

### பெண் போராட்டக்காரர்கள் காயம்

மணிப்பூரின் காங்போக்பி மாவட்டத்தில் உள்ள சைபோல் கிராமத்தில் குகி-ஜோ சமூகத்தினர் பதுங்குமிடங்களை பாதுகாப்புப் படையினர் செவ்வாய்க்கிழமை ஆக்கிரமித்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கு எதிராக பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அவர்கள் கலைந்து போக பாதுகாப்புப் படையினர் தடியடி நடத்தி, கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். இதில் பெண்கள் பலர் காயமடைந்தனர்.

**ஆடைகளைக் கிழித்ததாக குற்றச்சாட்டு:** போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களின் ஆடைகளைக் கிழித்து பாதுகாப்புப் படையினர் இழிவுபடுத்தியதாக குகி பெண் மனித உரிமைகள் அமைப்பு குற்றஞ்சாட்டியது.

விஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள உயோக்சிங் கிராமத்திலும் பாதுகாப்புப் படையினர், பெண்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டதாக மாநில காவல் துறை தெரிவித்தது.

# தென்பெண்ணை ஆற்றில் நச்சு நுரை: மத்திய, தமிழக அரசுகளுக்கு என்ஜிடி நோட்டீஸ்

**புது தில்லி, டிச. 31:** ஒசூர் அருகே தென்பெண்ணை ஆற்றில் தொழிற்சாலை கழிவுகள் கலப்பால் நச்சு நுரை ஏற்படுவது தொடர்பாக மத்திய-தமிழக அரசுகளிடம் விளக்கம் கோரி தேசிய பசுமைப் தீர்ப்பாயம் (என்ஜிடி) நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அண்மையில் தமிழக-கர்நாடக எல்லையில் பெய்த கனமழை காரணமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கெலவரப்பள்ளி அணை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, தென்பெண்ணை ஆற்றில் குவியல் குவியலாக நச்சு நுரை பொங்கியது. இதுகுறித்த ஊடக செய்தியின் அடிப்படையில், இந்த விவகாரத்தை தாமாக முன்வந்து தேசிய பசுமைத் தீர்ப்பாயம் விசாரித்து வருகிறது.

இந்நிலையில், தீர்ப்பாயத் தலைவர் நீதிபதி பிரகாஷ் ஸ்ரீவாஸ்தவா மற்றும் உறுப்பினர் ஏ.செந்தில்வேல் (துறைசார் நிபுணர்) ஆகியோர் அடங்கிய அமர்வின் சமீபத்திய உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது:

தொழிற்சாலைகளின் ரசாயனக் கழிவுகள் மற்றும் பெங்களூரில் இருந்து மறுசுழற்சி செய்யப்படாத கழிவுநீர் கலப்பதே நச்சு நுரைக்கு காரணம்; சில இடங்களில் 10 அடி உயரம் வரை நச்சு நுரை பொங்கியதாக ஊடக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நச்சு நுரையால் ஆற்று நீரில் ஆக்ஸிஜனின் அளவு குறைந்து, மீன்களின் இறப்புக்கும் ஆற்றில் உள்ள நன்மை செய்யும் பாசிகளின் அழிவுக்கும் காரணமாகிறது. இந்த ஆற்றுடன் தொடர்புடைய நிலத்தடி நீரையே அப்பகுதி மக்கள் நம்பியுள்ளனர். எனவே, நீர் மூலம் பரவும் நோய்களால் அவர்கள் பாதிக்கப்படும் அபாயமும் உள்ளதாக ஊடக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனமழை மற்றும் கெலவரப்பள்ளி அணை திறப்பைத் தொடர்ந்து, தென்பெண்ணை ஆற்றில் நச்சு நுரை ஏற்படுவது இது முதல் முறையல்ல. கடந்த அக்டோபரில் பல அடி உயரத்துக்கு பொங்கிய நச்சு நுரை, சாலைகளில் பரவி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. இதனால் அவசர கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஷயத்தில் கடந்த 1974-ஆம் ஆண்டின் நீர் மாசுபாடு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் கடந்த 1986-ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டப் பிரிவுகள் மீறப்படுவதை ஊடக செய்தி எடுத்துரைக்கிறது.

எனவே, மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் சென்னை மண்டல அலுவலகமும், மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் உறுப்பினர் செயலர்கள், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் ஆகியோரும் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பப்படுகிறது என்று உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பான அடுத்தகட்ட விசாரணை, 2025, பிப்ரவரி 10-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

# இந்திய-பசிபிக் பிராந்தியத்தின் எதிர்காலத் தேவைகளுக்கு ஒன்றிணைந்து பணி

## ‘க்வாட்’ கூட்டமைப்பு உறுதி

**புது தில்லி, டிச.31:** இந்திய-பசிபிக் பிராந்தியத்தின் எதிர்காலத் தேவைகளுக்கு ஒன்றிணைந்து பணியாற்றுவதில் உறுதியுடன் இருப்பதாக ‘க்வாட்’ கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

‘க்வாட்’ கூட்டமைப்பில் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய 4 நாடுகள் உள்ளன. இந்த நாடுகள் இடையே ஒத்துழைப்பு ஏற்படத் தொடங்கி 20 ஆண்டுகள் எட்டியதையொட்டி, 4 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த 2004-ஆம் ஆண்டு இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் சுனாமி மற்றும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அப்போது பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கு சேவையாற்ற இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்தன. தற்போது இந்த நாடுகள் அடங்கிய கூட்டமைப்பு ‘க்வாட்’ என்றழைக்கப்படுகிறது.

2004-ஆம் ஆண்டு ஏற்பட்ட பேரிடரின்போது கோடிக்கணக்கான மக்களுக்கு உதவ ‘க்வாட்’ நாடுகள் நடவடிக்கை மேற்கொண்டு 40,000-க்கும் மேற்பட்ட அவசர நிலை மீட்பாளர்களை பணியில் ஈடுபடுத்தியது.

மனிதாபிமான உதவிகள் மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளில் ‘க்வாட்’ நாடுகள் உறுதியாக உள்ளன.

2024-ஆம் ஆண்டில் இந்திய-பசிபிக் பிராந்தியம் முழுவதும் பேரிடர் முன்னேற்பாடுகள், உயிர் காக்கும் நிவாரண நடவடிக்கைகளில் ‘க்வாட்’ நாடுகள் கூட்டாக உதவின.

தடையற்ற இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, நிலையான தன்மை, வளமை இருக்க வேண்டும் என்பதே ‘க்வாட்’ கூட்டமைப்பின் தொலைநோக்குப் பார்வை.

தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் (ஆசியான்) ஒற்றுமையை நிலையாக ஆதரிக்க ‘க்வாட்’ கூட்டமைப்பு மீண்டும் உறுதி அளிக்கிறது. இந்திய-பசிபிக் பிராந்தியத்தின் எதிர்கால தேவைகளுக்கு ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்பதிலும் ‘க்வாட்’ கூட்டமைப்பு உறுதியாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

# வயநாடு நிலச்சரிவை பேரிடராக அறிவிப்பதில் மத்திய அரசு தாமதம்

## கேரள அமைச்சர் குற்றச்சாட்டு

**திருவனந்தபுரம், டிச. 31:** கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவுகளை தீவிரமான பேரிடராக அறிவிப்பதில் மத்திய அரசு தாமதம் செய்துவிட்டதாக கேரள வருவாய்த் துறை அமைச்சர் கே.ராஜன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

‘வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவுகள் தீவிரமான பேரிடராக அறிவிக்கப்படும்’ என்று மத்திய அரசு திங்கள்கிழமை கேரள அரசுக்கு அதிகாரபூர்வமாகத் தெரிவித்தது. இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக கேரள வருவாய்த் துறை அமைச்சர் கே.ராஜன், திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

வயநாடு தொடர்பான அறிவிப்பை வெளியிடுவதற்கு மத்திய அரசு ஐந்து மாதங்கள் தாமதித்தது ஏன் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. வயநாடு நிலச்சரிவு ஏற்பட்ட இரண்டு மாதங்களுக்குள் இத்தகைய அறிவிப்பை வெளியிட்டிருந்தால் அது பயனளிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

வயநாடு நிலச்சரிவு ஏற்பட்டு ஒரு மாதத்துக்குள் அமைச்சகங்களுக்கு இடையிலான குழு மத்திய உள்துறைக்கு தனது அறிக்கையை சமர்ப்பித்தபோதிலும் அதை தீவிர பேரிடராக அறிவிக்காமல் மத்திய அரசின் உயர்நிலைக் குழு காலம் தாழ்த்தியது.

இப்பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் கடன்களை 2005, பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்யுமாறும், அவர்களின் மறுவாழ்வுக்காக புதிய கடன்களை வழங்க உதவுமாறும் கேரளம் விடுத்த கோரிக்கைக்கு மத்திய அரசு இது வரை பதில் அளிக்கவில்லை.

இந்த விவகாரத்தில் மாநில அரசின் கோரிக்கையை ஏற்று நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களின் கடன்களை கேரள வங்கி தள்ளுபடி செய்துள்ளது. இது மத்திய அரசுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது.

மத்திய அரசின் அறிவிப்பு முன்கூட்டியே வந்திருந்தால் என்ஜிஓக்கள் உள்ளிட்ட அமைப்புகளின் உதவியுடன் மறுசீரமைப்புப் பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொண்டிருக்க முடியும்.

எனினும், மத்திய அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து வயநாட்டில் மறுசீரமைப்புப் பணிகளை கேரள அரசு முன்னெடுத்துச் செல்லும் என்றார்.

**இந்தியாவின் வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் தாக்கம்**

(Role and Impact of Science and Technology in the Development of India)

# ஸ்பேடெக்ஸ் விண்கலன்கள் ஜன. 7-ல் ஒருங்கிணைப்பு

## இஸ்ரோ தலைவர் சோமநாத் தகவல்

**சென்னை**

ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் இரட்டை விண்கலன்களை ஒருங்கிணைக்கும் செயல்பாடுகள் ஜனவரி 7-ம் தேதி நடைபெறும் என்று இஸ்ரோ தலைவர் சோமநாத் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த 30-ம் தேதி இரவு ஏவப்பட்ட பிஎஸ்எல்வி-சி60 ராக்கெட் மூலம் ஸ்பேடெக்ஸ் இரட்டை விண்கலன்கள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் கூறியதாவது:

இது ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து செலுத்தப்படும் 99-வது ராக்கெட் ஏவுதல். ஜனவரியில் 100-வது ராக்கெட்டை செலுத்துவதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. தொடர்ந்து 2025-ம் ஆண்டில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த உள்ளோம். தற்போது ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக முடிந்துள்ளது.

திட்டமிட்டபடி விண்கலன்கள் துல்லியமான சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இனிவரும் நாட்களில் 2 விண்கலன்களின் தொலைவும் படிப்படியாக 20 கி.மீ வரை அதிகரித்து, பின்னர் அவற்றை அருகருகே கொண்டு சென்று ஒருங்கிணைக்கும் பணிகள் நடைபெறும். அதன்படி, விண்கலன்கள் ஒருங்கிணைப்பு ஜனவரி 7-ம் தேதி நிகழ்த்தப்பட இருக்கிறது.



ஸ்பேடெக்ஸ் இரட்டை விண்கலன்களுடன் பிஎஸ்எல்வி-சி60 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்ட பின் செய்தியாளர்களை சந்தித்த இஸ்ரோ தலைவர் சோம்நாத். படம்: எஸ்.சத்தியசீலன்

இந்தியாவில் கடந்த 1986-ம் ஆண்டிலேயே 'ஸ்பேஸ் டாக்கிங்' தொழில்நுட்பத்தை பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டது. ஆனால், அப்போது அதற்கான தேவை இல்லை. மனிதர்களை விண்ணுக்கு அனுப்புவதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தவே இந்த தொழில்நுட்பம் தேவைப்படும். தற்போது, அது தொடர்பான ஆராய்ச்சிகளில் நாம் ஈடுபட்டுள்ளதால், இப்போது அந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே, பிஎஸ்எல்வி ராக்கெட்டின் இறுதி பாகமான பிஎஸ்-4 இயந்திரத்தின் 'போயம்' பகுதியில் மொத்தம் 24 ஆய்வுக் கருவிகள் உள்ளன. அதில் முக்கியமான ஒன்று 'ரோபோட்டிக் ஆர்ம்' (Debris Capture Robotic Arm). இதில் சிறிய கைகள்போல இருக்கும் ரோபோட்டிக் ஆர்ம் மூலமாக, விண்வெளியில் நகர்ந்து செல்லும் சோதனை செய்யப்பட உள்ளது. விண்வெளியில் ஆய்வு நிலையம் அமைக்கப்பட்டால், அதில் உள்ள பழுதை சரி பார்த்தல், எரிபொருள் நிரப்புதல் போன்ற பணிகளை இதன்மூலம் எளிதில் செய்ய முடியும்.

இன்னொரு முக்கியமான கருவி, கிராப்ஸ் (CROPS - Compact Research Module for Orbital Plant Studies). இதன்மூலம், புவியீர்ப்பு விசை இல்லாத விண்வெளி சூழலில் தாவரங்கள் வளர்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட உள்ளன.

## இந்தியாவின் வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் தாக்கம்

(Role and Impact of Science and Technology in the Development of India)

# ஜனவரியில் 100-ஆவது ராக்கெட் ஏவப்படும்

### இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் தகவல்



**சென்னை, டிச. 31:** ஜனவரி மாதத்தில் ஜிஎஸ்எல்வி ராக்கெட் திட்டத்தை செயல்படுத்த உள்ளதாகவும், இது ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து செலுத்தப்படும் 100-ஆவது ராக்கெட் ஏவுதல் என்றும் இஸ்ரோ தலைவர் எஸ். சோமநாத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் ஸ்ரீஹரிகோட்டாவில் அவர் மேலும் கூறியதாவது: பிஎஸ்எல்வி சி 60 ராக்கெட் திட்டம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து முன்னெடுக்கப்பட்ட 99-ஆவது செயல் திட்டமாகும்.

அதன் தொடர்ச்சியாக, 2025 புத்தாண்டில் பல்வேறு விண்வெளி ஆய்வுத் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளோம். குறிப்பாக, ஜனவரியில் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 100-ஆவது ராக்கெட்டை ஏவும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

ஸ்பேடெக்ஸ்திட்டத்திற்கான முதல்கட்டத்தைவெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளோம். அதன் கீழ் இரட்டை விண்கலன்களை ஒருங்கிணைக்க 7 நாள்கள் தேவைப்படுகிறது. அடுத்த கட்டமாக மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும்போது விண்கலன்களை அதிகபட்சம் 12 மணி நேரத்துக்குள் ஒருங்கிணைக்க வேண்டியது அவசியம்.

இத்திட்டத்துக்கு அதிக எரிபொருள் தேவைப்படும். ஸ்பேஸ் டாக்கிங் எனப்படும் இந்த விண்கலன் ஒருங்கிணைப்புத் தொழில்நுட்பத்தை 3 நாடுகள் செயல்படுத்தியுள்ளன.

இந்தியாவில் 1986-ஆம் ஆண்டே அதைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. ஆனால், அப்போது அதற்கான தேவை எழவில்லை.

தற்போது அவசியம் கருதி அத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

# சிறிய அணு உலைகள் அமைக்க விண்ணப்பம்: இந்திய அணுசக்தி நிறுவனம் தொடக்கம்

**புது தில்லி, டிச.31:** சிறிய அணு உலைகள் அமைப்பதற்கான விண்ணப்பங்களை இந்திய அணுசக்தி நிறுவனம் (என்பிசிஐஎல்) செவ்வாய்க்கிழமை பெறத் தொடங்கியது.

எஃகு, அலுமினியம், செம்பு மற்றும் சிமெண்ட் தொழிற்சாலைகளில் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கு மாற்றாக 220 மெகாவாட் பாரத் சிறிய அணு உலைகள் அமைப்பதற்கான விண்ணப்பங்களை பெறத் தொடங்கியதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், '220 மெகாவாட் பாரத சிறிய அணு உலைகள் பாதுகாப்பானது. பயன்பாட்டுக்கு உகந்தது. இதன்மூலம் பல்வேறு தொழிற்சாலைகளில் கார்பனுக்கு மாற்றான தீர்வுகளை உருவாக்க முடியும்.

இந்த அணு உலைகள் கார்பன் உமிழ்வுக்கேற்ப தொழிற்சாலைகள் செலுத்தும் வரியை குறைப்பதோடு சர்வதேச சந்தைகளில் தங்களின் பொருள்களுக்கு சிறந்த வணிகத்தை ஏற்படுத்தித் தரும் திறனுடையது.

அடுத்த பத்தாண்டுகளில் தனியார் துறையுடன் இணைந்து இது போன்று 40 முதல் 50 அணு உலைகள் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. கடந்த ஜூலை மாதம் பட்ஜெட் உரையின்போது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதன் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்' என தெரிவிக்கப்பட்டது.

# ஏஐ தொழில்நுட்பத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்

### கூகுள் பணியாளர்களுக்கு அறிவுறுத்தல்

**கலிபோர்னியா**

நடப்பாண்டில் கூகுள் நிறுவனத்தின் செயல்பாட்டு வியூகம் குறித்தான ஆலோசனைக் கூட்டம் அதன தலைவர் சுந்தர் பிச்சை தலைமையில் கலிபோர்னியாவில் நடைபெற்றது. அப்போது அவர் கூறியதாவது:

2025-ல் ஏஐ தொழில்நுட்பத்தின் நன்மைகளை கண்டறிந்து வெளிப்படுத்துவதிலும், பயனர் சிக்கல்களை தீர்ப்பதிலும் நாம் இடைவிடாமல் கவனம் செலுத்த வேண்டும்.ஜெமினி ஆப் மூலமாக ஏஐ தொழில்நுட்ப பயன்பாட்டை பரவலாக்க வேண்டும். கடந்த சில மாதங்களாக பயனர்களிடையே ஜெமினி ஆப்-க்கு வரவேற்பு அதிகரித்துள்ளது. 2025-ல் இடைவெளியை சரி செய்வதற்கும், முதலிடத்தை தக்க வைப்பதற்கும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஜெமினியை 500 மில்லியன் பயனர்கள் கொண்ட நுகர்வோர் தளமாக மாற்றுவது கூகுளின் மிக லட்சிய இலக்குகளில் ஒன்று. வரலாற்றில் எப்போதும் முதல் இடத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், நீங்கள் நன்றாக செயல்பட்டு முதல் தரமான பொருளை உருவாக்க வேண்டும். அது, 2025-ல் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார்.

**விளையாட்டு**
(Sports)

# தமிழ்நாட்டை வென்றது விதர்பா

**விசாகப்பட்டினம், டிச. 31:** விஜய் ஹஸாரே கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழ்நாடு அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் விதர்பா அணியிடம் செவ்வாய்க்கிழமை தோற்றது.

போட்டியில் இத்துடன் இரு அணிகளும் தலா 4 ஆட்டங்களில் விளையாடியிருக்க, குரூப் 'டி'-யில் விதர்பா 4 வெற்றிகளுடன் முதலிடத்திலும், தமிழ்நாடு முதல் தோல்வியுடன் 3-ஆவது இடத்திலும் உள்ளன.

இந்த ஆட்டத்தில் முதலில் தமிழ்நாடு 48.4 ஓவர்களில் 256 ரன்களுக்கு 10 விக்கெட்டுகளையும் இழந்தது. பின்னர் விதர்பா 43.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 257 ரன்கள் சேர்த்து வென்றது. விதர்பா பௌலர் தர்ஷன் நல்கண்டே ஆட்டநாயகன் விருது பெற்றார்.

முன்னதாக டாஸ் வென்ற விதர்பா, பந்துவீச்சை தேர்வு செய்தது. தமிழ்நாடு இன்னிங்ஸில் துஷார் ரஹேஜா 4 பவுண்டரிகள், 6 சிக்ஸர்களுடன் 75, முகமது அலி 6 பவுண்டரிகளுடன் 48, ஆண்ட்ரே சித்தார்த் 3 பவுண்டரிகளுடன் 40 ரன்கள் அடித்தனர்.

நாராயண் ஜெகதீசன் 6, பிரதோஷ் ரஞ்சன் பால் 28, விஜய் சங்கர் 27, கேப்டன் சாய் கிஷோர் 14, வருண் சக்கரவர்த்தி 3, அச்யுத் 0 ரன்களுக்கு வெளியேற்றப்பட்டனர். முடிவில் சந்தீப் வாரியர் 2 ரன்களுடன் கடைசி வீரராக களத்திலிருந்தார்.

விதர்பா பந்துவீச்சில் தர்ஷன் நல்கண்டே 6 விக்கெட்டுகள் சாய்த்து அசத்த, ஹர்ஷ் துபே 2, யஷ் தாக்குர், நசிகெட் புத்தே ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

பின்னர் 257 ரன்களை வெற்றி இலக்காகக் கொண்டு விளையாடிய விதர்பா தரப்பில், துருவ் ஷோரே 31, யஷ் ரத்தோட் 14, யஷ் கடம் 31, ஜிதேஷ் சர்மா 23 ரன்களுக்கு வீழ்த்தப்பட்டனர்.

கருண் நாயர் 14 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உள்பட 111 ரன்கள் விளாசி அணியின் வெற்றிக்கு வித்திட்டு, இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ஷுபம் துபே 39 ரன்களுடன் அவருக்குத் துணையாக இருந்தார்.

தமிழ்நாடு பௌலர்களில் சாய் கிஷோர் 2, சந்தீப் வாரியர், வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.

## ஆயுஷ் மாத்ரே உலக சாதனை




நாகாலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை வீரர் ஆயுஷ் மாத்ரே 117 பந்துகளில் 15 பவுண்டரிகள், 11 சிக்ஸர்கள் உள்பட 181 ரன்கள் விளாசினார்.

இதன்மூலம், 'லிஸ்ட் ஏ' கிரிக்கெட்டில் 150-க்கும் அதிகமாக ரன்கள் சேர்த்த இளம் வீரர் (17 ஆண்டுகள், 168 நாள்கள்) என்ற புதிய உலக சாதனை படைத்தார். முன்னதாக இந்திய பேட்டர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 17 ஆண்டுகள், 291 நாள்களில் 150 ரன்களை கடந்ததே குறைந்தபட்சமாக இருந்தது.

இந்த ஆட்டத்தில், நடப்பு சாம்பியன் மும்பை 189 ரன்கள் வித்தியாசத்தில் நாகாலாந்தை வீழ்த்தியது. மும்பை 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 403 ரன்கள் குவிக்க, நாகாலாந்து 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழந்து 214 ரன்களே சேர்த்தது.

உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்

# கால் இறுதி சுற்றுக்கு ஆர்.வைஷாலி முன்னேற்றம்

**பிரக்ஞானந்தா, அர்ஜுன் எரிகைசி ஏமாற்றம்**

நியூயார்க்

இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர்.வைஷாலி, உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பில் கால் இறுதி சுற்றுக்கு முன்னேறி உள்ளார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான தகுதி சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர்.வைஷாலி 9.5 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்து கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார். 11 ஆட்டங்களில் அவர், மூன்றை டிரா செய்தார். அவருக்கு அடுத்த படியாக ரஷ்யாவைச் சேர்ந்த கேத்ரீனா லக்னோ 8.5 புள்ளிகள் சேர்த்தார். மற்ற 6 வீராங்கனைகள் தலா 8 புள்ளிகளை சேர்த்து கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினர். மற்றொரு இந்திய கிராண்ட் மாஸ்டரான கொனேரு ஹம்பி 8 புள்ளிகளுடன் 9-வது இடம் பிடித்து ஏமாற்றம் அளித்தார். கால் இறுதி சுற்றில் வைஷாலி, சீனா கிராண்ட் மாஸ்டரான சூ ஜினருடன் மோதுகிறார்.



• ஆர்.வைஷாலி

வைஷாலி 7 மற்றும் 8-வது சுற்றில் முறையே ஜார்ஜியாவின் நானா ஜாக்னிட்ஜே மற்றும் ரஷ்யாவின் வாலண்டினா குனினா ஆகியோரை வீழ்த்தியிருந்தார். இந்த இரு வெற்றியும் வைஷாலி முதலிடம் பிடிக்க உதவியது. மற்ற இந்திய கிராண்ட் மாஸ்டர்களான திவ்யா தேஷ்முக் 7 புள்ளிகளுடன் 18-வது இடத்தையும், வந்திகா அகர்வால் 7 புள்ளிகளுடன் 19-வது இடத்தையும், ஹரிகா 7 புள்ளிகளுடன் 22-வது இடத்தையும் பிடித்து கால் இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தனர்.

ஓபன் பிரிவு தகுதி சுற்றில் உலகின் முதல் நிலை வீரராக நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் உள்ளிட்ட 10 பேர் முதலித்தை பகிர்ந்து கொண்டனர். கார்ல்சன் 13 ஆட்டங்களில், 6 ஆட்டங்களை டிரா செய்திருந்தார். இதன் பின்னர் நடைபெற்ற டைபிரேக்கரில் ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்சி 9.5 புள்ளிகளுடன் தகுதி சுற்றில் முதலிடம் பிடித்தார். அமெரிக்காவின் ஃபேபியானோ கருனா 2-வது இடமும், கார்ல்சன் 3-வது இடமும் பிடித்து கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினர். இவர்களுடன் ரஷ்யாவின் வோலோடர் முர்சின், அமெரிக்காவின் ஹான்ஸ் நீமன் மோக், வெஸ்லி சோ, போலந்தின் டூடா ஜான் கிர்ஷ்டோஃப், பிரான்ஸின் அலிரேசா ஃபிரோஸா ஆகியோரும் கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினர்.

முதல் 8 இடங்களுக்குள் வராததால் இந்திய வீரர்கள் கால் இறுதி சுற்றில் நுழையும் வாய்ப்பை இழந்தனர். பிரக்ஞானந்தா 8.5 புள்ளிகளுடன் 23-வது இடத்தையும், ரவுனக் சத்வானி 8 புள்ளிகளுடன் 46-வது இடத்தையும், அர்ஜுன் எரிகைசி 7 புள்ளிகளுடன் 64-வது இடத்தையும், அர்விந்த் சிதம்பரம் 7 புள்ளிகளுடன் 68-வது இடத்தையும், வி.பிரணவ் 7 புள்ளிகளுடன் 67-வது இடத்தையும் பிடித்து ஏமாற்றம் அளித்தனர்.

அர்ஜுன் எரிகைசி முதல் 5 சுற்றுகளில் வெற்றி பெற்றிருந்தார். ஆனால் அதன் பின்னர் அவரிடம் இருந்து மேம்பட்ட திறன் வெளிப்படவில்லை. பிரக்ஞானந்தா கடைசி சுற்றில் ரஷ்யாவின் டேனியல் துபோவிடம் தோல்வி அடைந்தார். இந்த தோல்வி பிரக்ஞானந்தா கால் இறுதி சுற்றுக்கு முன்னேறுவதற்கு தடையாக அமைந்தது.

# உலக டெஸ்ட் அணி: ஜஸ்பிரீத் பும்ரா கேப்டன்



**புது தில்லி, டிச. 31:** ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம், 2024-ஆம் ஆண்டுக்கான உலக அளவிலான சிறந்த கிரிக்கெட் அணியை தேர்வு செய்துள்ள நிலையில், அதற்கு இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவை கேப்டனாக்கியுள்ளது.

6 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இடம் பிடித்திருக்கும் இந்த அணியில், மற்றொரு இந்தியராக யஷஸ்வி ஜெய்ஸ்வாலும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய பௌலர் ஜோஷ் ஹேஸில்வுட், விக்கெட் கீப்பர்-பேட்டர் அலெக்ஸ் கேரி, நியூஸிலாந்து பேட்டர்களான மேட் ஹென்றி, ரச்சின் ரவீந்திரா, இங்கிலாந்தின் ஜோ ரூட், பென் டக்கெட், ஹேரி புரூக், இலங்கையின் கமிண்டு மெண்டிஸ், தென்னாப்பிரிக்காவின் கேசவ் மஹராஜ் ஆகியோரும் அந்த அணியில் இடம்பிடித்துள்ளனர்.